## இரண்டு நாட்களாக போக்கு காட்டி வந்த

# பெஞ்சல் புயல் உருவானது

■ புதுச்சேரி அருகே இன்று கரை கடக்கிறது ■ 90 கி.மீ. வேகத்தில் சூறைக்காற்று வீசும் ■ புதுவை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட்

**சென்னை,நவ.30:** வங்கக் கடலில் கடந்த 23ம் தேதி முதல் மையம் கொண்டு போக்குக் காட்டி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவடைந்து நேற்று மாலை புயலாக மாறியது. இந்த புயலுக்கு 'பெஞ்சல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அது இன்று மாலை புதுச்சேரி அருகே புயலாகவே கரையை கடக்கும் எனவும், அப்போது மணிக்கு 90 கிமீ வேகத்தில் காற்று வீசும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதையடுத்து, சென்னை உள்பட 7 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடப்பட்டுள்ளது.


வங்கக்கடல் பகுதியில் கடந்த 23ம் தேதி உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி படிப்படியாக வலுப்பெற்று



▶ பெஞ்சல் புயல் உருவானதை தொடர்ந்து, சென்னை மற்றும் புறநகரில் நேற்று கன மழை பெய்தது. புழுதிவாக்கம் அருகே பரங்கிமலை இணைப்பு சாலையில் கொட்டும் மழையில் செல்லும் வாகனங்கள்.

நேற்று முன்தினம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் கடந்த 4 நாட்களாக கன மழை பெய்து வருகிறது. கன மழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கும், புதுவை, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பள்ளி - கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இந்த தாழ்வு மண்டலம் 30ம் தேதி காலை காரைக்கால் மற்றும் மாமல்லபுரம் அருகே கரையை கடக்கும் என கணிக்கப்பட்ட நிலையில், அது நகர்ந்து வரும் வேகம் 9 கி.மீட்டராக இருந்தது. பின்னர் அது 7 கி.மீட்டராக வேகம் குறைந்து நகர்ந்துவந்தது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுப்பெறாமல் வலுவிழக்கும்



என்றும் நேற்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வளி மண்டல காற்று சுழற்சியில் கீழ் பகுதியில் காற்று குவிதல், மேல் பகுதியில் காற்று விரிவடைதல் போன்ற நிகழ்வின் காரணமாக அது மேலும் வலுவடைந்து புயலாக மாறும் வாய்ப்புள்ளது என்றும் நேற்று காலையில் கணிக்கப்பட்டது. அதற்கேற்ப நேற்று மதியம் 2.30 மணி அளவில் மேலும்






வலுப்பெற்று புயலாக மாறியது. இந்த புயலுக்கு 'பெஞ்சல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அது இன்று(30ம் தேதி) பிற்பகலில் காரைக்கால்- புதுச்சேரி இடையே கரையைக் கடக்கும் என்றும் கணிக்கப்பட்டது. இந்த நிகழ்வின் காரணமாக நேற்று முன்தினம் இரவு முதல் கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்யத்தொடங்கியது. கடலோரத்துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளன.

கடலோர மாவட்டங்களில் மேலும் அதி கனமழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதால் பாதிப்புகளை தடுக்க முன்னேற்பாடுகளை அரசு எடுத்துள்ளது. பல்வேறு இடங்களுக்கு மீட்புப்படைகளும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. வங்கக் கடலில் புயல் உருவானது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத்தலைவர் பாலசந்திரன் கூறியதாவது:

நேற்று வங்கக் கடலில் தென் மேற்கு பகுதியில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று பிற்பகல்(29ம் தேதி) 2.30 மணி அளவில் புயலாக வலுப்பெற்றுள்ளது. 'பெஞ்சல்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புயல் புதுச்சேரிக்கு தென் கிழக்கே சுமார் 270 கிமீ தொலைவில்

9ம் பக்கம் பார்க்க